பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**24 09 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உள்நாட்டில் செல்போன் தயாரிப்பை அதிகரிக்கவும், தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. மருத்துவ முதுநிலை பட்டப்படிப்புக்கான நீட் தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டது.

3. உலகளாவிய பருவநிலை மற்றும் எரிசக்தி கொள்கையை அமைப்பதில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதாக ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

4. சீனா மீதான வர்த்தகத் தடை மேலும் இரண்டு மாதங்களுக்கு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியின் மகளிர் பிரிவு கபடி கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - ஜப்பானை வென்றது.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

உள்நாட்டில் செல்போன் தயாரிப்பை அதிகரிக்கவும், தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் திரு எஸ் கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உள்நாட்டு தேவைக்காக 99 புள்ளி இரண்டு சதவீத செல்போன் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவதாக கூறினார்.

நாட்டில் ஆண்டுக்கு 33 கோடி செல்போன்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

உலக அளவிலான ஐந்து பெரிய செல்போன் நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

உலக அளவிலான சந்தை போட்டிகளை எதிர்கொள்ளும் வகையில், செல்போன் உற்பத்தியை ஊக்குவிக்க அனைத்து நடவடிக்கைகளும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக திரு கிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மருத்துவ முதுநிலை பட்டப் படிப்புக்கான நீட் தேர்வு முடிவுகள் இன்று வெளியானது.

கடந்த ஆகஸ்ட் மாதம் **30**-ஆம் தேதி நடைபெற்ற இந்த தேர்வுக்கான முடிவுகள் **nbe.edu.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதில், 2 லட்சத்து 65 ஆயிரத்து 960 பேர் தேர்வு எழுதினர்.

அக்டோபர் ஒன்றாம் தேதிக்கு பிறகு இணையதளத்திலிருந்து மதிப்பெண்கள் குறித்த தகவல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

உலகளாவிய பருவநிலை மற்றும் எரிசக்தி கொள்கையை அமைப்பதில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதாக ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் பருவநிலை மாற்றம் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய ஆஸ்திரேலிய எரிசக்தித்துறை அமைச்சர் திரு **Chris Bowen,** சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், புத்தாக்க மின் உற்பத்திக்கு இந்தியா முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறினார்.

மின் உற்பத்தி, முதலீடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

வரும் நவம்பர் மாதத்தில் துருக்கியில் பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ நா மாநாடு நடைபெறவுள்ளதாக திரு **Chris Bowen** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசு புதிய தேசிய மின்சாரக் கொள்கையை அறிமுகப்படுத்த உள்ளதாக மத்திய மின்துறை செயலர் திரு பங்கஜ் அகர்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மின்சாரத்துறை மாநாட்டில் உரையாற்றிய அவர், இதுதொடர்பான வரைவுக் கொள்கையை கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்டதாக தெரிவித்தார்.

மின்சாரத்துறையுடன் இணைந்த அனைவரின் தகவல்களும், பரிந்துரைகளும் வரவேற்பதாக திரு பங்கஜ் அகர்வால் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ராணுவ தளவாடங்கள் நவீன போர் முறைக்கு ஏற்ப கொள்முதல் செய்ய வேண்டும் என்று முப்படை தளபதி ஜென்ரல் என் எஸ் ராஜா சுப்பிரமணி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பாதுகாப்புத்துறையை வலுப்படுத்த தொழில்நுட்பமும், தொழில் நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கூறினார்.

போர் முனைகளில் ராணுவ தளவாடங்களை சரி செய்வதற்கான தொழில்நுட்பம் அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ராணுவ தளவாட உற்பத்தியில் சுயசார்பை எட்ட புத்தாக்க நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், பொறியாளர்கள், மாணவர்கள், தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்கு மிகவும் முக்கியம் என்று அவர் தெரிவித்தார்.

எதிரி நாடுகள் குறித்த உளவுத்தகவல்களை தெரிந்துகொள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தலாம் என்று ஜென்ரல் என் எஸ் ராஜா சுப்பிரமணி கூறினார்.

<<<<<<>>>>>>

ஆந்திரப்பிரதேசத்தில் மழை பாதிப்பை எதிர்கொள்ள தயார்நிலையில் இருக்க வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சியர்களுடன் தொலைபேசி மூலம் அவர் ஆலோசனை நடத்தினார்.

மழையால் சேதமடைந்த சாலைகளை சீர் செய்யவும், துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகளை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

வங்கக்கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஆந்திரா — ஒடிஷா இடையே கரையை கடந்தபோதிலும், ஆந்திராவின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவும் ஆட்சியர்களுக்கு, திரு சந்திரபாபு நாயுடு அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>>

சீனா மீதான வர்த்தக தடை மேலும் இரண்டு மாதங்களுக்கு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும் என்று அமெரிக்க நிதியமைச்சர் திரு **Scott Bessent** தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் இதனை தெரிவித்த அவர், இதுதொடர்பான **Busan** ஒப்பந்தம் வரும் ஜனவரி **10**-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப், சீன அதிபர் திரு **Xi Jinping** இடையே தென்கொரியாவில் கடந்த ஆண்டு இதுதொடர்பான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் வரும் நவம்பர் 10-ஆம் தேதி முடிவடைய உள்ள நிலையில், மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டித்து அமெரிக்கா அறிவித்துள்ளது.

சீன அதிபரும், அமெரிக்க அதிபருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற உள்ள நிலையில், இது முக்கியத்துவம் பெறுகிறது.

இருப்பினும், சீனா இந்த ஒப்பந்தத்தை நீட்டிப்பது தொடர்பாக எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி பொறுப்பேற்ற பிறகு, மக்கள் நலத்திட்டங்களுக்கான இலக்குகளை எட்டுவதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்கு அனைத்து அமைச்சகங்கள் மற்றும் துறைகள் தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உள்ளார்ந்த வளர்ச்சி மற்றும் சமூக அதிகாரத்தை உறுதி செய்து மக்களின் வாழ்வில் பெரிய மாற்றங்களை கொண்டுவருவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அரசு அதிகாரிகளின் செயல் திறனை மேம்படுத்துவதற்கான கர்மயோகி இயக்கம் குறித்த தொகுப்பு இன்று இடம்பெறுகிறது....

***(Voice Over - 95 Seconds)***

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூர் - தில்லி ஆனந்த் விஹார் ரயில் நிலையம் இடையே புதிய ரயில் சேவை தொடங்கப்பட உள்ளது.

கான்பூரிலிருந்து இரவு மணி **8.40**-க்கு புறப்படும் இந்த ரயில், மறுநாள் காலை மணி **4.50**-க்கு ஆனந்த் விஹார் சென்றடையும்.

மறுமார்க்கத்தில் ஆனந்த் விஹாரிலிருந்து, இரவு மணி **11.25**-க்கு புறப்படும் இந்த ரயில், மறுநாள் காலை மணி **7.25**-க்கு கான்பூர் வந்தடையும்.

<<<<<<>>>>>>

ஆசிய விளையாட்டுப் போட்டியின் மகளிர் பிரிவு கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா **50-25** என்ற கணக்கில் ஜப்பானை வென்றது.

ஏ பிரிவில் **6** புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்த இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் ஹாக்கிப்பிரிவில் இந்தியா **8-2** என்ற கோல் கணக்கில் தென்கொரியாவை வென்றது.

ஏ பிரிவில் மூன்று போட்டிகளில் வெற்றிபெற்ற இந்தியா **9** புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

----------

ஆசிய விளையாட்டுப் போட்டியின் துடுப்பு படகு ஆடவர் இரட்டையர் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற **Satnam Singh, Salman Khan** ஆகியோருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இப்போட்டியின் **Wushu** பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற **Roshibina Devi-**க்கும், பேட்மிண்டன் ஆடவர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற வீரர்களுக்கும் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

--------------

**Baku** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் திக் விஜய் பிரதாப் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>>**